# திருக்குறளில் இல்லற அறம்சார் உணர்வுகள்

வெ.பாலமுருகன், B.LIT,M.A,B.ED,M.PHIL,M.A.
தமிழாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,
அயனம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.
balamuruganmohana@gmail.com

7

**ஆய்வு நோக்கம்**

அறம், பொருள், இன்பம், வீடு என்பதில் முதலில் வைத்து எண்ணப்படுவது அறம். திருக்குறளில் இல்லற அறம் சார்ந்த உணர்வுக் கருத்துகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. வாழ்வியல் படிநிலைகள், இல்வாழ்க்கை, இல்லாளும் இல்வாழ்வானும்- இல்லறம் துணை நலத்துடன் நடத்தி வரும் இல்வாழ்க்கையாகும், விருந்தோம்பல் இல்லந்தோறும் விருந்தோம்பல் சிறப்பாக நடைபெறும் ஒரு சமுதாயத்தையே வள்ளுவர் விரும்பினார். ஈதல் அறம் - மனித வாழ்வில் ஈகை என்பது மனித இனம் தோன்றியது முதல் இன்று வரை கடைபிடிக்கப்படும் தனி அறம் என்று கூறலாம். பயனில சொல்லாமை இனியவை கூறல், ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, கொல்லாமை, மக்கட்பேறு - இல்வாழ்க்கையில் பெற வேண்டிய பேறுகள் பல உள்ளன. அவற்றுள் நல்ல மக்களைப் பெறும்பேறு ஒன்று. மக்கட் செல்வத்தின் சிறப்பு, சினம் கொள்ளாமை, அவாஅறுத்தல், அருளுடைமை என்ற தலைப்புகளில் வள்ளுவரின் இல்லற அறம் சார்ந்த உணர்வுகள் கூறப்பட உள்ளன. திருக்குறள் பல்வேறு அறங்களை வலியுறுத்தும் உயர்ந்த இலக்கியமாகும். மேலே கூறப்பட்டவாறு திருவள்ளுவரின் பல்வேறு இல்லற அறம் சார்ந்த உணர்வுகளை இக்கட்டுரை பேசுகின்றது.

**ஆய்வுச் சுருக்கம்**

அறம், பொருள், இன்பம், வீடு என்பதில் முதலில் வைத்து எண்ணப்படுவது அறம். இன்புறுத்துவது என்னும் கருத்தியல் நிலைப்பாடுடையவர்களும் அறத்தின் வழிப்பட்ட இன்புறுத்தலையே முன்மொழிகின்றனர். "அறத்தான் வருவதே இன்பம்" என்னும் உயர்சிந்தனையை, “அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்தே புகழும் இல்” (குறள்: 39) என்ற திருக்குறள் மூலம் உணரலாம். அந்தவகையில் திருக்குறளில் இல்லற அறம் சார்ந்த உணர்வுக் கருத்துகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

இல்வாழ்க்கை, பயனில சொல்லாமை , இனியவை கூறல், ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, சினம் கொள்ளாமை, கொல்லாமை, அவாஅறுத்தல், அருளுடைமை

**முன்னுரை**

அறம், பொருள், இன்பம், வீடு என்பதில் முதலில் வைத்து எண்ணப்படுவது அறம். இன்புறுத்துவது என்னும் கருத்தியல் நிலைப்பாடுடையவர்களும் அறத்தின் வழிப்பட்ட இன்புறுத்தலையே முன்மொழிகின்றனர். "அறத்தான் வருவதே இன்பம்" என்னும் உயர்சிந்தனையை, “அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்தே புகழும் இல்” (குறள்: 39) என்ற திருக்குறள் மூலம் உணரலாம். அந்தவகையில் திருக்குறளில் இல்லற அறம் சார்ந்த உணர்வுக் கருத்துகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**வாழ்வியல் படிநிலைகள்**

மனிதன் வாழ்வாங்கு வாழ அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலில் பத்து படிநிலைகளைக் காட்டுகிறார். அவற்றின் வழிமுன்னோக்கி நடந்தால் உயர்நிலை அடையலாம் என்பது உறுதி. அடக்கமுடைமை, அருளுடைமை, அன்புடைமை, ஆள்வினை உடைமை, அறிவுடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நாணுடைமை, பண்புடைமை, பொறையுடைமை ஆகியன அப்பத்து படிநிலைகளாகும். நிலம், வீடு, அணிகலன்கள், காசு, பணம் ஆகியவற்றையே நாம் உடைமைகள் என்கிறோம். ஆனால் வள்ளுவரோ இப்பத்து உடமைகளைத்தான் எல்லாவற்றையும் பெற நம்மை தகுதிப்படுத்தும் என்கிறார். எண்ணம், சொல், செயல், ஆகிய மூன்றும் நன்றாக ஒன்றாக அமைய வேண்டும்; சிறக்கும் பயிர் வளர்த்திற்கு எப்படி மண் காற்று, உரம் தேவைப்படுமோ அப்படி மனவளம் மேம்பட இம்மூன்றும் இன்றியமையாதத் தேவையாக இருக்கிறது. மண் வளம் பெற ஆழ உழுதல் வேண்டும். மனம் வளம் பெற ஒருவனுக்கு ஆள்வினை தேவை.

முடியும் என்கிற நம்பிக்கையும், அதற்கான முயற்சியும் ஒருவனிடத்தில் இருக்குமானால் அதைவிட பெரிய பேறு வேறு எதுவும் இல்லை. தன்னை வளப்படுத்திக்கொள்ள நல்ல எண்ணமும், அந்த செயலுக்கான முயற்சியும் தேவை. அப்போதுதான் அவனால் உயர முடியும். எண்ணத்தைச் சொல்லிலும், சொல்லைச் செயலிலும் காட்ட முயற்சி செய்ய வேண்டும். அம்மெய் முயற்சியே ஆள்வினை உடைமை என்கிறார் திருவள்ளுவர்.

**இல்வாழ்க்கை**

இல்லறம் நடத்தும் கணவனும் மனைவியுமாகிய இருவரும் ஒத்த மனம் உடையவர். ஆதலின், இன்ப துன்ப உணர்வுகளையும் மற்ற மனநிலைகளையும் கணவனோ மனைவியோ மறைத்து வாழும் வாழ்க்கைக்கு இங்கு இடம் இல்லை. அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு. அறத்தைப் போற்றி வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன். அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவனே வாழ முயல்கின்றவர்கள் எல்லோரிலும் தலையானவன்.

**இல்லாளும் இல்வாழ்வானும்**

இல்லறம் துணை நலத்துடன் நடத்தி வரும் இல்வாழ்க்கையாகும், இல்வாழ்க்கையில் இல்வாழ்வானாக கணவனும், இல்லாளாக மனைவியும் இணைவதாகத் திருவள்ளுவர் கூறுகிறார். இருவரும் அறநெறியில் தமது இல்லறத்தை நடத்துவதைவிட மேம்பட்ட வாழ்க்கைப் பயன் எதுவும் இல்லை என்பதைச் சுட்ட விரும்பும் திருவள்ளுவர்,

“அறத்தாற்றின் இல்வாழ்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்”

என்று கூறித் தனது கருத்தினைப் பதிவு செய்கிறார். இல்வாழ்க்கையில் வாழ்ந்து, அதற்குரிய நல்ல முறையிலே ஒழுகுகின்றவன், மறுமை இன்பத்தை நாடி முயற்சி செய்கின்றவரை விடச் சிறந்தவனாவான் என்ற கருத்தை உடையவர் திருவள்ளுவர் என்பது குறப்பாக்களின் வழி தெளிவாகிறது. நற்றிணை முதல் பாடலில் தண்ணீர் இல்லாமல் உலகம் இல்லை, அதைப் போன்று தலைவி இல்லாமல் இல்லறம் இல்லை என்பதைக் கபிலர்.

“புரைய மன்ற, புரையோர் கேண்மை
நீரின்றி அமையா உலகம் போலத்
தம் இன்றி அமையா தம் நயத்தருளி”

என்றும்,

"வேங்கைவீ உகும் ஓங்கு மலைக்காட்சி
மயில் அறிவு அறியாமன்னோர்
மயில் குரல் கவரும் கைப்புறக்கிளியே”

என்றும் கூறுகின்றார்.

தலைவனைக் காணாமல் தலைவிக்கு எதிரில் நடப்பது எதுவுமே தெரியவில்லை, தினைப்புனம் காவல் காத்த தலைவி தினையைக் கிளிகள் கொத்தியது கூடத் தெரியாதவளாகத் தலைவனையே நினைத்து உடல் வருந்தினாள். இதில் தலைவியின் அன்புநெறி புலப்படுகிறது. இதே அன்புநெறி திருக்குறளில் பல இடங்களிலும் வெளிப்படுகின்றது. இல்லறத்தில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது தேவையாகும். இல்லற ஒழுக்கத்தைக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வொழுக்கத்தைச் செயல் ஒழுக்கம், உணர்வு ஒழுக்கம் என இரண்டாகப் பாகுபடுத்தலாம். செயல் ஒழுக்கத்தில் குடும்பத்தில் உள்ளவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களையும், உணர்வு ஒழுக்கத்தில் இல்லற ஒழுக்கத்தால் ஏற்படும் பயனையும் அடக்கலாம். அன்பும் பண்பும் நிறைந்த ஆண், பெண் இருவரும் இணைந்து நடத்தும் வாழ்க்கை இல்லறமாகும். இல்லற வாழ்க்கைக்குத் திருமணம் வழிவகை செய்கிறது. இல்லற வாழ்வு நல்வாழ்வாக அமையவும் மாற்றார் பார்த்து பழிபேசாதவையாகவும் அறம் நல்வழிக்

காட்டுகின்றதை குறளின் வழி அறியலாம்.

**விருந்தோம்பல்**

இல்லந்தோறும்/விருந்தோம்பல் சிறப்பாக நடைபெறும் ஒரு சமுதாயத்தையே வள்ளுவர் விரும்பினார். விருந்தோம்புபவன் இல்லத்தில் செல்வம் பெருகும், வறுமை தலைகாட்டாது என்பது வள்ளுவர் கருத்து. (குறள் 81) மனைவியோடு சேர்ந்து இல்லற வாழ்க்கை வாழ்வது விருந்தினரை உபசரிப்பதற்கே ஆகும். விருந்தோம்பும் அறத்திற்குச் சமூகத்தில் அதிக ஆதரவு இருப்பதனால் சிலர் விருந்தோம்பும் சிறப்பைக் கண்டு அவ்வூரிலுள்ள பிறர் உதவ முன்வருவர். அவ்வாறு பிறர் தாமாகவே உதவ முன் வருவதனால் விருந்தோம்புவோரது செல்வம் குறைவுபடாமல் இருக்குமெனவும் கருதுதல் கூடும்.

**ஈதல் அறம்**

மனித வாழ்வில் ஈகை என்பது மனித இனம் தோன்றியது முதல் இன்று வரை கடைபிடிக்கப்படும் தனி அறம் என்று கூறலாம். ஈகைக்குணம் உடையவர்களாக மக்கள் வாழ வேண்டும். இது வறுமையை மட்டும் போக்குவதுடன் அறச்சிந்தனையையும் வளர்க்கிறது; புகழையும் தருகிறது. மனிதப் பண்பை உணர்த்தும் நெறி ஈதல் அறமாகும். பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் அவ்வாறு கொடுத்து உதவும்போது மனிதன் பக்குவம் அடைந்தவனாகிவிடுகிறான். ஈகை குணம் மனிதனை மாண்புடையவனாக்கும். ஈகைக் குணமே உயிரின் ஊதியம் என்பர். கொடுத்து புகழடையும் வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கை என்பதைக் குறள் உணர்த்துகிறது.

**பயனில சொல்லாமை**

பயனில்லாத சொற்களைச் சொல்லி பழகுகின்றவன் கள்ளுண்பவனைப் போலவும், சூதாடுபவனைப் போலவும் காலத்தையும் ஆற்றலையும் வீணாக்கி கடமையையும் மறக்கின்றான். அதனால் அவன் அடையும் பயனோ பொய்யான இன்பமாகும். தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் போலியான இன்பம். அறத்தைப் போற்றி வாழ வேண்டியவன் இவ்வாறு வீண்வாழ்வு வாழக் கூடாது. (குறள் 192) வாய்ச்சொற்கள் நம் மனநிலையைக் வெளிப்படுத்தக்கூடியவை. மனதில் அறநினைவு இருந்தால் பயனில்லாத எண்ணங்கள் தோன்றாது. அந்த எண்ணங்களின் விளைவான பயனில்லாத சொற்களைப் பேசுதலும் இயலாது.

**இனியவை கூறல்**

அன்பு கலந்தவைகளாய், வஞ்சனை அற்றவைகளாய் மெய்ப்பொருள் உணர்ந்தவர்களின் வாயில் பிறக்கும் சொற்கள் இன்சொற்களாம். விருப்பத்துடன் முகம்மலர்ந்து, இன்சொல் கூறும் தன்மை இருந்தால், அது மனம் உவந்து பொருளைக் கொடுத்து உதவுவதை விட நல்லது. ஒருவரைக் கண்டால் முகத்தில் விருப்பம் தோன்றி, இனிமையாகப் பார்த்து மனம் கலந்து இன்சொல் கூறுவதே அறநெறி ஆகும்.

**ஒழுக்கமுடைமை**

உயிர் எல்லாப் பொருளையும் விடச் சிறந்ததே ஆயினும் அந்த உயிருக்கும் சிறப்புத் தரவல்லதாக ஒழுக்கம் விளங்குகின்றது. ஆகையால் உயிரைவிட ஒழுக்கமே சிறந்ததாகக் கொண்டு, காக்க

வேண்டும். ஒழுக்கத்தைக் காப்பதற்காக எவ்வளவு துன்பம் நேர்வதானாலும் வருந்தி ஏற்க வேண்டும்.(குறள்.131)

**பொறையுடைமை**

பொறுமையைப் போற்றுகின்றவர் நிலத்தைப் பார்த்து கற்க வேண்டும். நிலம் தன்னை வெட்டித் தோண்டுகின்றவரையும் விழாமல் தாங்குகின்றது. அதனால் நிலத்தின் ஆற்றல் குறைவதில்லை. அதுபோல் தம்மை இகழ்வாரைப் பொறுத்துக் கொள்வதே சிறந்த அறம். (குறள்-151)

**கொல்லாமை**

ஓர் உயிர் துன்பம் உறுமாறு இன்னா செய்வது தீது; அதுபோலவே உயிர் உடம்பை விட்டு நீங்குமாறு கொலை செய்வதும் தீது. அறமான செய்கை எது என்றால், ஒருயிரையும் கொல்லாமல் இருப்பதே ஆகும்.

(குறள்-321)

**மக்கட்பேறு**

இல்வாழ்க்கையில் பெற வேண்டிய பேறுகள் பல உள்ளன. அவற்றுள் நல்ல மக்களைப் பெறும்பேறு ஒன்று. அறிய வேண்டியவற்றை அறிவதற்குரிய மக்களைப் பெறுவதுபோல் மற்றப் பேறுகள் அவ்வளவு சிறப்புடையவை அல்ல. பழி இல்லாத பண்புடைய நல்ல மக்களைப் பெற்றால், ஏழுபிறவியிலும் அத்தகைய பெற்றோரைத் தீமைகள் அணுகுவதில்லை.

**மக்கட் செல்வத்தின் சிறப்பு**

நல்லறத்தால் மனிதன் பெற்றச் செல்வங்களைவிட இல்லறத்தில் பெற்றெடுத்தக் குழந்தைச் செல்வமே பெற்றோர்களுக்குப் பெரும் செல்வமாகும். குழந்தைகளின் பிஞ்சு விரல்கள் மேனியைத் தொடும் போது உணரும் இன்பத்தின் இனிமையும், அக்குழந்தையின் மழலைச் சொல்லின் இனிமையையும்,(குறள்-65) குழந்தைகளின் பிஞ்சுக் கைகளால் பிசைந்த உணவு பெற்றோர்களுக்கு அமுதத்தைவிட இனிமைதரும் (குறள்-66) என்பதை விளக்குகின்றன.

**சினம் கொள்ளாமை**

சினம் என்பது ஒரு கொடிய விஷம் இது அடுத்தவர்களை மட்டும் இன்றி தன்னையே அழித்து விடும் ஒருவன் தன்னை காத்துக் கொள்ள வேண்டும் என்றால் அவன் தன் கோபத்தை அடக்க வேண்டும். (குறள். 306) சினம் சேர்ந்தாரை அழிக்கும். சினத்தை விட ஒருவனுக்குக் கொடிய பகை வேறு இல்லை. ஒருவன் தன் மனதால் கோபத்தை எண்ணாமல் வாழ்வானானால் அவன் எண்ணிய நன்மைகள் எல்லாவற்றையும் பெறுவான். சினம் நீக்கினால் வாழ்வில் இன்பம் பெருகும் என்பதைத் திருவள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

**அவாஅறுத்தல்**

பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்து மெய்யுணர்வு பெற்றவர்களுக்கு அவா அற்ற நிலைமை இயல்பாகிவிடும். ஒரு பொருளையும் விரும்பாமல் வாழும் அந்த நிலைமையே சிறந்த செல்வமாகும். அதைப் போன்று சிறந்த செல்வம் இவ்வுலகத்தில் இல்லை. வேறு எங்கும் அதற்கு நிகரானது இல்லை. தூய நிலையாகிய வீடு என்பது, அவா இல்லாத வாழ்வே ஆகும். அது

மெய்ப்பொருள் ஒன்றையே நாடி விரும்புவதால் வந்து அமையும். (குறள்:363)

**அருளுடைமை**

ஒருவனுக்கு முதலில் தன் குழந்தைகளின்மேல் அன்பு இயற்கையாக ஏற்படும். அந்த அன்பிலே நெஞ்சம் பழகப் பழக, தான் பழகும் மற்றக் குழந்தைகளின்மேலும் படிப்படியாக அன்பு வளரும். அந்த அன்பிலும் நெஞ்சம் தோயத்தோய, உலகத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளின் மேலும் அன்பு செல்லும். (குறள்-241) வாழ்க்கையில் நல்ல நெறியில் நின்று உண்மைகளை ஆராய்ந்து அருளுடையவராக விளங்கவேண்டுமென்று வள்ளுவம் வலியுறுத்துகிறது.

**முடிவுரை**

திருக்குறள் பல்வேறு அறங்களை வலியுறுத்தும் உயர்ந்த இலக்கியமாகும். காரணம் அறக்கருத்துகள் என்பது சமுதாய ஒழுக்கமாக வளர்த்தெடுக்கப்படும். திருக்குறளானது அறம் என்பதற்குப் பல்வேறு குறள்களில் விளக்கம் தருகிறது. மனதில் மாசு இல்லாது வாழ்வதும் பிற உயிரினங்களின்மீது இரக்கம் கொள்வதும் இனிய சொற்களைக் கூறுதலும் இல்லத்தின் பயனாகவும் அமைவதும் என்று பல பொருள்களை அறம் என்பதற்கு விளக்கமாக வள்ளுவம் கூறுகின்றது. இருந்தபோதிலும் மனதில் மாசு இல்லாமல் வாழ்வதே அறம் என்பதையே அறத்துப்பாலில் வள்ளுவர் மிகவும் தெளிவுபட விளக்கிக் கூறியுள்ளார். எனவே அறத்தின் ஆட்சி வலிமையை உணர்ந்து, இல்லறத்தில் அறநெறி சார்ந்த உணர்வுகளைப் போற்றி வாழ்வதே நமது கடமையாகும். வள்ளுவர் வழி வாழ்வதே ஆகச் சிறப்பு.

**துணைநூல்கள்**:


1. அறவாணன். க. ப., தமிழ்ச் சமுதாய வரலாறு,
2. இளங்குமரனார். இரா., திருக்குறள் வாழ்வியல் உரை, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2004
3. இராசேந்திரன். தி.வெ., திருக்குறள் ஒரு சமூகப் பார்வை,
4. குணா, வள்ளுவத்தின் வீழ்ச்சி, தமிழக ஆய்வரண், பெங்களூர்.
5. சிதம்பரம் பிள்ளை.வ.உ, திருக்குறள் தெளிவுரை, வ.உ.சி நூலகம், சென்னை.
6. திருநாவுக்கரசு. க.த., திருக்குறள் நீதிக் களஞ்சியம்,
7. நாமக்கல் கவிஞர், திருக்குறள் மூலமும் தெளிவுரையும் தமிழ் நிலையம், சென்னை, 2017
8. பரிமேலழகர் உரை, திருக்குறள், பெரியண்ணன் நூலகம், திண்டிவனம், 2022.
9. பாவலரேறு பெருஞ்சித்திரனார், திருக்குறள் மெய்ப்பொருள் உரை, தேன்மொழிப் படிப்பகம், 1997.
10. பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, 3 ஆம் பதிப்பு, 2011
11. முத்துக்குமாரசுவாமித் தம்பிரான், திருக்குறள் உரைக்கொத்து, திருப்பனந்தாள் காசி மடம், 1969
12. மு.வ., திருவள்ளுவர் - வாழ்க்கை விளக்கம்.